ஐநா நிகழ்வுகளில் பங்கேற்பதற்கு 18 எம்பிகள் நியூயார்க் பயணம்

தமிழகத்தில் இருந்து எல்.கே.சுதீஷ் செல்கிறார்

சென்னை, அக்.1: ஐநா நிகழ்வுகளில் பங்கேற்க 18 எம்பிகள் நியூயார்க் பயணம் மேற்கொள்ள உள்ளனர். இந்த குழுவில் தமிழகத்தில் இருந்து தேமுதிக எம்பி எல்.கே.சுதீஷ் செல்கிறார்.

இதுகுறித்து தேமுதிக தலைமை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை:

ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு முக்கிய நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக, இந்திய நாடாளுமன்றத்தைச் சேர்ந்த 18 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அக்டோபர் மாதம் அமெரிக்காவின் நியூயார்க் நகருக்கு பயணம் மேற்கொள்ள உள்ளனர். அக்டோபர் 5 முதல் 9ம் தேதி வரை நடைபெற உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு நிகழ்வுகளில் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்க உள்ளனர்.

இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தி செல்லும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில், தமிழ்நாட்டின் சார்பில் தேமுதிக பொருளாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான எல்.கே.சுதீஷ் பங்கேற்க உள்ளார். இந்தப் பயணத்தின் போது, ஐக்கிய நாடுகள் சபையின் சிறார் நிதியம், ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் அதிகாரிகளுடன் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆலோசனை நடத்த உள்ளனர்.

மேலும், உலக அளவில் வேகமாக வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், அதன் எதிர்கால பயன்பாடுகள், சமூக மற்றும் பொருளாதார தாக்கங்கள் உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் குறித்து, ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளரின் தொழில்நுட்ப தூதருடனும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாட உள்ளனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

யூடியூப் உள்ளிட்ட சமூக வலைதளங்களில்

சீமான் குறித்து அவதூறு பதிவு செய்பவர்கள் மீது நடவடிக்கை

போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் நாம் தமிழர் கட்சி சார்பில் புகார்

சென்னை, அக்.1: சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில், நாம் தமிழர் கட்சி பொதுச்செயலாளர் திருமால் செல்வன் அளித்துள்ள புகாரில் கூறியிருப்பதாவது:

சீமான் குறித்து இன்ஸ்டாகிராம், பேஸ்புக் மற்றும் யூடியூப் பக்கங்களில் சிலர் அவதூறாகவும், அவரது பெயர் மற்றும் குணநலங்களுக்கு களங்கம் விளைவிக்கும் நோக்கத்துடன் இழிவான கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

குறிப்பிட்ட தளங்கள் மூலம் கூறப்படும் குற்றச்சாட்டுகளும், கருத்துகளும் முற்றிலும் பொய்யானவை மற்றும் எந்தவித ஆதாரமும் உண்மையும் கிடையாது. இவ்வாறு கேலி செய்யும் படங்கள், காணொளிகள் பொதுமக்களின் பார்வையில் சீமான் பிம்பத்தை கெடுக்கும் நோக்கத்துடன் மீண்டும் மீண்டும் வெளியிடப்பட்டு பரப்பட்டு வருகிறது.

எனவே திட்டமிட்டு பொய்யான கருத்துகளை பரப்பி வரும் நபர்கள் மீதும், அவர்களின் வலைதள பக்கங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

ஒப்பந்த முறையை கைவிட வலியுறுத்தி

எம்.ஆர்.பி. செவிலியர்கள் உண்ணாவிரத போராட்டம்

அரசு மருத்துவமனைகளில் ஒப்பந்த அடிப்படையில் செவிலியர்களை பணியமர்த்துவதை கண்டித்து, தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கத்தினர், சென்னை சேப்பாக்கம் சிவானந்தா சாலையில் நேற்று உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சென்னை, அக்.1: அரசு மருத்துவமனைகளில் ஒப்பந்த அடிப்படையில் செவிலியர்களை பணி அமர்த்துவதை கண்டித்து, எம்.ஆர்.பி. செவிலியர்கள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழக அரசு மருத்துவமனைகளில் ஒப்பந்த அடிப்படையில் செவிலியர்களை நியமிக்கும் முறையை கைவிட வேண்டும் என்று தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் சார்பில் நேற்று சென்னை சிவானந்தா சாலையில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்திற்கு சங்கத்தின் தலைவர் கு.சசிகலா தலைமை வகித்தார். பொதுச்செயலாளர் சுபின், துணை தலைவர் சி.சேசு டெல்குயின் ஆகியோர் முன்னிலை வகித்தனர். போராட்டத்தில் 300க்கும் மேற்பட்ட செவிலியர்கள் கலந்துகொண்டனர்.

போராட்டத்திற்கு பல்வேறு சங்க அமைப்புகள் நேரில் வந்து ஆதரவு தெரிவித்தன.

அதனை தொடர்ந்து சங்கத்தின் பொதுச்செயலாளர் சுபின் நிருபர்களிடம் கூறியதாவது:

அரசு மருத்துவமனைகளில் ஒப்பந்த அடிப்படையில் செவிலியர்களை பணி அமர்த்தக் கூடாது. எம்.ஆர்.பி. தேர்வு மூலமே அவர்களை நியமிக்க வேண்டும். ஒப்பந்த முறையில் நியமனம் செய்தால், தேர்வுக்காக இரவு பகலாக படிக்கும் செவிலியர்களின் எதிர்காலம் முற்றிலும் கேள்விக்குறியாகிவிடும்.

சட்டசபையில் அறிவித்தபடி, 2,500 செவிலியர்கள் பணி நிரந்தரம் செய்வதற்கான அரசாணையை அரசு உடனடியாக வெளியிட வேண்டும். செவிலியர்கள் பணி நிரவல் முறையை அரசு கைவிட வேண்டும். தவெக தேர்தல் வாக்குறுதியின் படி, அனைத்து எம்.ஆர்.பி. செவிலியர்களையும் பணி நிரந்தரம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், புதிதாக தொடங்கப்பட உள்ள 6 செவிலியர் கல்லூரிகளிலும் ஒப்பந்த அடிப்படையில் செவிலியர்கள் நியமிக்கும் அரசாணையை அரசு உடனே ரத்து செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

வார விடுமுறை கூட கிடையாது

ஒப்பந்த செவிலியர் பிரேமலதா கூறுகையில், ‘2018ம் ஆண்டு முதல் ஒப்பந்த முறையில் பணியாற்றி வருகிறேன், பணி நியமன ஆணையில் 3 ஷிப்ட் வேலை என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், நடைமுறையில் 12 முதல் 24 மணி நேரம் வரை தொடர்ச்சியாக வேலை செய்ய வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறோம். மேலும், அடிப்படை வார விடுமுறை கூட கிடைப்பதில்லை, மருத்துவர்கள் மற்றும் இதர ஊழியர்களின் பொறுப்புகளையும் சேர்த்தே சுமக்க வேண்டியுள்ளது. கர்ப்பிணிகளுக்கு சுகப்பிரசவம் மற்றும் ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் செவிலியர்களுக்கே உரிய ஓய்வோ, ஆரோக்கியமான சூழலோ கிடைப்பதில்லை,’ என்றார்.

டிஜிட்டல் தொழில்நுட்ப அறிவு உள்ளவர்களையும் ஏமாற்றி

இணைய வழியில் ரூ.1.12 கோடி மோசடி

- டாக்டர், வங்கி அதிகாரி, ஐ.டி.நிபுணர்களும் பாதிப்பு
- ‘மனஅடைப்பு’ ஏற்படுத்தி கோடிக்கணக்கில் பறிப்பு
- சைபர் குற்றவாளிகள் குறித்து ஆய்வில் அதிர்ச்சி தகவல்

சென்னை, அக்.1: ஐ.ஐ.டி. மெட்ராஸ் தலைமையிலான ஆய்வில் சென்னை, பெங்களூரு, ஐதராபாத், புதுடெல்லி, மும்பை ஆகிய 5 நகரங்களைச் சேர்ந்த 33 நிதி சைபர் மோசடி பாதிக்கப்பட்டவர்களிடம் நேர்காணல் நடத்தப்பட்டது. இதில் 22 ஆண்கள், 11 பெண்கள் மற்றும் 12 மூத்த குடிமக்கள் இடம்பெற்றனர்.

28 ஆண்டுகள் தகவல் தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு துறையில் பணியாற்றிய ஒருவரே சைபர் மோசடியில் சிக்கி ரூ.90 லட்சத்தை இழந்த சம்பவமும் ஆய்வில் இடம்பெற்றுள்ளது. பாதிக்கப்பட்டவர்களின் நிதி இழப்பு சில ஆயிரம் ரூபாயில் இருந்து ரூ.1 கோடிக்கும் அதிகமாக இருந்ததாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

போலி ‘டிஜிட்டல் கைது’, போலி முதலீட்டு மற்றும் பங்குச்சந்தை தளங்கள், வேலை மற்றும் பணிகளை செய்து பணம் சம்பாதிக்கும் மோசடி, இணையவழி பணப்பரிவர்த்தனை மோசடி உள்ளிட்ட பல்வேறு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆதார், யுபிஐ உள்ளிட்ட பெயர்களை பயன்படுத்தி அச்சுறுத்துவதும், போலி முதலீட்டு தளங்களுக்கு நம்பகத்தன்மை இருப்பது போன்று காட்டுவதும் மோசடி கும்பல்களின் முக்கிய உத்திகளாக இருந்துள்ளன.

மோசடி கும்பல்கள் தொழில்நுட்ப அறிவை மட்டுமின்றி, பாதிக்கப்பட்டவர்களின் மனநிலையையும் பயன்படுத்துவதாக ஆய்வில் தெரியவந்துள்ளது. குடும்பத்தில் நோய், ஓய்வு, வேலை தேடுதல், பணிச்சுமை, குடும்ப பொறுப்பு அல்லது நிதி நெருக்கடி போன்ற சூழ்நிலைகளில் இருப்பவர்களை குறிவைத்து பயம், அவசரம், பணம் கிடைக்கும் என்ற ஆசை, சமூக மரியாதை குறித்த அச்சம் ஆகியவற்றை ஏற்படுத்துகின்றனர்.

இதனால், சம்பவம் நடைபெறும் நேரத்தில் வழக்கமாக சிந்தித்து முடிவெடுக்கும் திறன் தற்காலிகமாக பாதிக்கப்படும் நிலையை ஆய்வாளர்கள் ‘என்ஜினீயர்டு பிரெயின் ப்ரீஸ்’ அல்லது ‘மன அடைப்பு’ என குறிப்பிட்டுள்ளனர்.

சில ‘டிஜிட்டல் கைது’ மோசடிகளில் பாதிக்கப்பட்டவர்களை தனியாக ஓர் அறையில் இருக்கும்படி கூறி காணொலி அழைப்பு மூலம் தொடர்ந்து கண்காணித்ததாகவும் ஆய்வில் பதிவாகியுள்ளது. அதேபோல், முதலீட்டு மோசடிகளில் முதலில் சிறிய தொகையை செலுத்த வைத்து நம்பிக்கையை ஏற்படுத்திவிட்டு, பின்னர் அதிக தொகையை முதலீடு செய்ய வற்புறுத்திய சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

சைபர் மோசடிக்குப் பிறகு பலர் பணத்தை மட்டுமின்றி மனநிம்மதியையும் இழந்துள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது. அவமானம், தூக்கமின்மை, மனச்சோர்வு மற்றும் குடும்ப உறவுகளில் பாதிப்பு ஏற்பட்டதாக பலர் தெரிவித்துள்ளனர். சிலர் மோசடிக்குப் பிறகு இணையவழி பணப்பரிவர்த்தனைகளையே தவிர்க்கத் தொடங்கியதாகவும் கூறியுள்ளனர்.

மேலும், மோசடி குறித்து புகார் அளித்த பின்னர் வங்கிகள் மற்றும் சைபர் குற்றப்பிரிவுகளின் நடவடிக்கைகளில் ஒரே மாதிரியான நடைமுறை இல்லை என்றும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். சில இடங்களில் விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில், சிலர் உரிய ஒருங்கிணைப்பு இல்லாமல் பல்வேறு அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“சைபர் குற்றம் என்பது டிஜிட்டல் அறிவு இல்லாதவர்களின் பிரச்சினை மட்டும் அல்ல. பயம், மன அழுத்தம், அவசரம் ஆகியவற்றை மோசடி கும்பல்கள் பயன்படுத்தும்போது, டிஜிட்டல் அனுபவம் அதிகம் உள்ளவர்களும் பாதிக்கப்படலாம்” என ஐ.ஐ.டி. மெட்ராஸ் பேராசிரியர் நந்தன் சுதர்சனம் தெரிவித்துள்ளார்.

மோசடியில் சிக்கியவர்களையே குறை கூறுவதற்கு பதிலாக, வங்கிகள் மற்றும் காவல்துறை அமைப்புகள் மோசடியை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து பணத்தை தடுத்து நிறுத்தும் வகையில் விரைவான நடவடிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நடைமுறைகளை உருவாக்க வேண்டும் என ஆய்வாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும், பொதுவான ‘ஆன்லைனில் கவனமாக இருங்கள்’ என்ற விழிப்புணர்வை மட்டும் வழங்காமல், ஒவ்வொரு மோசடி முறையையும் விளக்கும் வகையில் தனித்தனி விழிப்புணர்வு நடவடிக்கைகள் தேவை என்றும் பரிந்துரைத்துள்ளனர்.

பாக்ஸ்//

சைபர் மோசடியில் பணத்தை இழந்தவர்கள் தாமதிக்காமல் 1930 என்ற சைபர் குற்ற உதவி எண்ணில் புகார் அளிப்பதுடன், இணையவழி நிதி மோசடிகளைத் தடுப்பதற்கான அதிகாரப்பூர்வ புகார் நடைமுறையையும் உடனடியாக பயன்படுத்த வேண்டும்.

மாணவர் தற்கொலை 61 சதவீதமாக உயர்வு

உயர்கல்வி துறையை இருளில் தள்ளிய ஒன்றிய பாஜ அரசு

மாணிக்கம் தாகூர் கண்டனம்

சென்னை, அக்.1: தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் கீழ் அமைக்கப்பட்டுள்ள தேசிய பணிக்குழு சமர்ப்பித்துள்ள இடைக்கால அறிக்கை, மோடி தலைமையிலான பாஜ ஆட்சியில் நாட்டின் உயர் கல்வித் துறை எத்தகைய இருண்ட படுகுழியில் தள்ளப்பட்டுள்ளது என்பதற்கான பகிரங்க சான்றாக அமைந்துள்ளது.

உயர்கல்வி வளாகங்களில் பயிலும் மாணவர்களின் மனநலம் மற்றும் தொடரும் தற்கொலைகள் குறித்து நாடெங்கிலும் உள்ள 2.43 லட்சம் மாணவர்களிடம் நடத்தப்பட்ட இந்த விரிவான ஆய்வில், அதிர்ச்சியளிக்கும் உண்மைகள் அம்பலமாகியுள்ளன. ஆய்வில் பங்கேற்ற மாணவர்களில் 9 சதவீதம் பேர் தற்கொலை எண்ணங்களை எதிர்கொள்வதாகவும், 15 சதவீதம் பேர் கடுமையான மன உளைச்சல் மற்றும் பதற்றத்தில் தவிப்பதாகவும், 34 சதவீதம் பேர் கல்வி வளாகங்களுக்குள் வேற்று நபர்களாகப் புறக்கணிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

மாணவர்களில் 67 சதவீதம் பேர் பட்டியல் சாதிகள், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த எளிய குடும்பத்துப் பிள்ளைகள் ஆவர். இத்தகைய தீவிர மன அழுத்தச் சூழலிலும், நாட்டின் 32 சதவீத உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்கு வழிகாட்ட அடிப்படை மனநல ஆலோசனைக் கட்டமைப்புகளே இல்லை என்பது நிர்வாகங்களின் அலட்சியத்தைக் காட்டுகிறது. மோடி அரசின் கடந்த 10 ஆண்டுகளில் மாணவர் தற்கொலைகளின் எண்ணிக்கை 61 சதவீதத்திற்கும் மேல் அதிர்ச்சியளிக்கும் வகையில் உயர்ந்துள்ளது.

2018 முதல் 2023 வரையிலான காலகட்டத்தில் ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம். மற்றும் மத்தியப் பல்கலைக்கழகங்கள் போன்ற நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் இருந்து மட்டும் 13,600க்கும் மேற்பட்ட எஸ்.சி., எஸ்.டி. மற்றும் ஓ.பி.சி. மாணவர்கள் பாதியிலேயே வெளியேற்றப்பட்டுள்ளனர்.

கல்வித்துறையைத் தனது கார்ப்பரேட் வணிகக் கூட்டாளிகள் கல்லா கட்டுவதற்கான ஒரு வணிகக் களமாக மாற்றி, அவர்களுக்கு லாபம் ஈட்டித் தருவதிலேயே இந்த அரசு முழு முனைப்புடன் செயல்படுகிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தனக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட

வழக்கை ரத்து செய்ய கோரி அன்பில் மகேஸ் மனு

காவல்துறை பதில்தர ஐகோர்ட் உத்தரவு

சென்னை, அக்.1: தனக்கு எதிராக மத்திய குற்றப்பிரிவு போலீசார் பதிவு செய்த வழக்கை ரத்து செய்யக்கோரி முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தாக்கல் செய்த மனுவுக்கு பதில் தருமாறு காவல்துறைக்கு, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தனியார் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம், டிடிசிபி, சிம்டிஏ அனுமதிகள் மற்றும் பிற சட்டப்பூர்வ அனுமதிகளை பெற்று தருவதாக கூறி, தமிழகம் முழுவதும் பல தனியார் பள்ளி நிர்வாகிகளிடமிருந்து 100 கோடி ரூபாய் வரை வசூலித்து மோசடி செய்ததாக தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் அரசகுமார், முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, முன்னாள் எம்எல்ஏ முத்துகுமார், சுரேஷ், ராஜா உள்ளிட்டோர் மீது மத்திய குற்றப்பிரிவு போலீஸ் வழக்குப்பதிவு செய்தது.

இந்த வழக்கை ரத்து செய்ய கோரி அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த மனு நீதிபதி வி.லட்சுமிநாராயணன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் சார்பில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் ஆஜராகி, குற்றச்சாட்டு தொடர்பாக மத்திய குற்றப்பிரிவு போலீசார் மனுதாரருக்கு சம்மன் அனுப்பியது. அவரும் ஆஜராகி சுமார் 8 மணி நேரம் நடந்த விசாரணைக்கு ஒத்துழைத்தார்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட அரசகுமார் மீதான குண்டர் தடுப்பு சட்ட நடவடிக்கை ரத்து செய்யப்பட்டுள்ளது. குற்றப்பிரிவு போலீசார் பதிவு செய்த வழக்கிலும் ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை மாற்றப்பட்டதற்கு பிறகுதான் மனுதாரரின் பெயர் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.

சம்பவம் நடந்ததாக கூறப்படும் காலக்கட்டத்தில் மனுதாரர் அமைச்சராக இருந்ததால் அவர் மீது வழக்கு பதிவு செய்ய ஆளுநரிடம்தான் அனுமதி பெற்றிருக்க வேண்டும். ஆனால், அரசு செயலாளரிடம் அனுமதி பெறப்பட்டுள்ளது. இது சட்டத்திற்கு முரணானது என்று வாதிட்டார். வழக்கை விசாரித்த நீதிபதி, இந்த மனுவுக்கு காவல்துறை ஒரு வாரத்தில் பதில்தருமாறு உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்தார்.

Central Bank of India
सेंट्रल बैंक ऑफ़ इंडिया
சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா

மயிலாப்பூர் கிளை
211/95, T V லோகநாதன் டவர், VM தெரு, மயிலாப்பூர்,
சென்னை-600 040 Ph: 044-23464291 / Mob: 99620 52877

SARFAESI சட்டம் 2002-ன் கீழ் இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) / 9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.

சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியாவில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்தினை சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் நேரடியான சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு அந்த சொத்து "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில் கடன்தாரர்/ அடமானதாரரிடமிருந்து கடன் தொகை மற்றும் வட்டி, இதர செலவுகளை சேர்த்து வசூலிப்பதற்காக https://baanknet.com என்ற இணையதளம் வழியாக விற்பனை செய்யப்படும் என இதன்மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்கள்: 1.Mr.நந்தகோபால் G, 2.Mrs.லட்சுமி G, இருவரது முகவரி, எண்.7/116, பொம்மநாயக்கன் பாளையம், நெரிப்பெரிச்சல், திருப்பூர், தமிழ்நாடு - 641602

கோரிக்கை அறிவிப்பு தேதி: 30.11.2024 / கடன் நிலுவைத்தொகை: 30.09.2026 அன்றுள்ளபடி ₹ 3,03,80,566.30 மற்றும் வட்டி, கட்டணங்கள்; சுவாதீனம் அறிவிப்பு தேதி: 15.02.2025

அடமானத்தில் உள்ள சொத்து விவரம்

சென்னை மாவட்டம், பெரம்பூர் புரசைவாக்கம் தாலுகா, தற்போது புரசைவாக்கம் தாலுகா, புரசைவாக்கம் கிராமத்தில், பழைய சர்வே எண்.509, CC எண்.209, RS எண்.2932/5, R.S.எண்.2932/152-ன் விவரப்படி கதவு எண்.182, பழைய எண்.115/2, வரதம்மாள் கார்டன், 2-வது தெரு, கீழ்ப்பாக்கம், சென்னை-600 010 என்னும் முகவரியில் உள்ள 2104 சதுர அடி நிலம் (504 சதுர அடி பாதை உட்பட) மற்றும் தரை தளம் மற்றும் முதல் தளத்தில் 3200 சதுர அடி கொண்ட கட்டிடம், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். இந்த சொத்தானது Mr.நந்த கோபால் G அவர்களுக்கு சொந்தமானது.

விற்பனை பத்திரத்தின்படி பரப்பு: நிலத்தின் பரப்பு 2104 சதுர அடி (504 சதுர அடி பாதை உட்பட) அதனுடன் தரை தளம் மற்றும் முதல் தளத்தில் 3200 சதுர அடி கொண்ட கட்டிடம்; விற்பனை பத்திரத்தின்படி எல்லைகள்: வடக்கு: RS எண்.2935/5, தெற்கு: Mrs.பட்டம்மாள் & மற்றவர்களுக்கு சொந்தமான சொத்து, கிழக்கு: RS எண்.2949, மேற்கு: வரதம்மாள் கார்டன் இரண்டாவது தெரு, மனையின் தற்போதுள்ள/கண்டறியப்பட்டுள்ள பரப்பு: நிலத்தின் பரப்பு 2077 சதுர அடி (477 சதுர அடி பாதை உட்பட) அதனுடன் தரை தளம் மற்றும் முதல் தளத்தில் 3200 சதுர அடி கொண்ட கட்டிடம். குறிப்பு: விற்பனை பத்திரத்தின் படி 504 சதுர அடி (7-0' x 72-0') பாதை உட்பட நிலத்தின் மொத்த பரப்பு 2104 சதுர அடி, மனையின் படி 477 சதுர அடி (6-9' x 72-0') பாதை. தற்போதுள்ள எல்லைகள்: வடக்கு: RS எண்.2932/5 பகுதியில் கதவு எண்.181-ல் உள்ள கமலா நிவாஸ் அபார்ட்மெண்ட், தெற்கு: RS எண்.2932/5 பகுதியில் உள்ள காலி வீட்டு மனை மற்றும் கதவு எண்.183-ல் உள்ள குடியிருப்பு சொத்து, கிழக்கு: RS எண்.2949-ல் உள்ள காலி நிலம், மேற்கு: TS எண்.2932/5 பகுதியில் உள்ள காலி வீட்டு மனை மற்றும் 20 அடி அகல ரோடு (வரதம்மாள் கார்டன் 2-வது தெரு).

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 2,25,00,000/- முன்பணத்தொகை ₹ 22,50,000/-
ஏல உயர்வு தொகை ₹ 1,00,000/- சுவாதீனம் வகை: நேரடி (Physical)
இ-ஏல தேதி மற்றும் நேரம்: 17.10.2026 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
EMD சமர்ப்பிக்க கடைசி நாள்/நேரம்: 17.10.2026 மாலை 3.30 மணிக்குள்
சொத்தினை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: 13.10.2026 காலை 10.00 மணி முதல் 4.00 மணி வரை

மேலும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் விபரத்திற்கு கீழ்கண்ட இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம், இ-ஏல சேவை வழங்குனர் இணையதள முகவரி https://baanknet.com (அல்லது) வங்கியின் இணையதள முகவரி: https://www.centralbankofindia.co.in

சொத்துக்களை பார்வையிட மற்றும் இதர விவரங்களுக்கு, சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, மயிலாப்பூர் கிளை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, Mr.Abhishek Kumar, முதன்மை மேலாளர் Mob: 99620 52877 மற்றும் Mr.Shaliesh Kumar Jha, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, Mob: 95973 17252, மண்டல அலுவலகம், சென்னை அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை தொடர்பு கொள்ளவும்.

SARFAESI சட்டம், 2002 விதி 8(6) / 9(1)-ன்கீழ் 15 நாள் கால அவகாச விற்பனை அறிவிப்பு
மேற்காணும் கடன்தாரர்கள்/அடமானதாரர்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பதாவது யாதெனில் மேற்காணும் கடன்பாக்கி மற்றும் இதர செலவுகளை இ-ஏலத்தேதிக்கு முன்னர் செலுத்தத் தவறினால் அந்த சொத்து இ-ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு கடன் பாக்கி வசூலிக்கப்படும். பின்னர் பாக்கி ஏதேனும் இருந்தாலும் வட்டி மற்றும் இதர செலவுகளுக்கும் தங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

இடம்: சென்னை; தேதி: 30.09.2026 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா

புதிய காஸ் சிலிண்டர் இணைப்புகளுக்கு தடை

250% அதிக விலைக்கு காஸ் சிலிண்டர் விற்பது அநீதி

அன்புமணி கண்டனம்

சென்னை, அக்.1: பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஈரானுக்கும், அமெரிக்கா மற்றும் அதன் நேச நாடுகளுக்கும் இடையே நடைபெற்று வரும் போரை காரணம் காட்டி, இந்தியன் ஆயில் நிறுவனம், பாரத் பெட்ரோலியம், இந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய 3 பொதுத்துறை நிறுவனங்களும், பொது மக்களுக்கு புதிய சமையல் எரிவாயு இணைப்பு வழங்குவதை நிறுத்தி வைத்துள்ளன. அதுமட்டுமின்றி, கடந்த ஜூன் மாதம் முதல் பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு இன்னும் புதிய இணைப்புகள் வழங்கப்படவில்லை.

மாறாக, புதிய இணைப்பு கோருவோருக்கு தற்காலிக தலா 10 கிலோ எடை கொண்ட இரு எரிவாயு உருளைகளை ரூ.9250 வரை கட்டணம் வசூலித்துக் கொண்டு வழங்குகின்றன. அதில் ரூ.6000 திரும்பப்பெறக் கூடிய பாதுகாப்பு டெபாசிட் என்றும், மீதமுள்ள ரூ.3250 சமையல் எரிவாயுக்கான விலை என்றும் எண்ணெய் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. இது பெரும் கொள்ளை ஆகும்.

10 கிலோ எடையுள்ள இரு எரிவாயு உருளைகளுக்கு ரூ.1318.30 மட்டுமே வசூலிக்கப்பட வேண்டும். ஆனால், அதை விட இரண்டரை மடங்கு அதிகமாக ரூ.3250க்கு விற்பனை செய்வதை அனுமதிக்க முடியாது. புதிய இணைப்புகளை வழங்க முடியாது என்று கூறி விட்டு, 250% கூடுதல் விலைக்கு சமையல் எரிவாயு உருளைகளை எண்ணெய் நிறுவனங்கள் விற்பனை செய்வது சேவையல்ல. அது பெரும் லாபமீட்டும் பேராசை. மக்களை சுரண்டும் அணுகுமுறை.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

pnb Housing
Finance Limited
Ghar Ki Baat

[illegible]

சென்னை கிளை-RH சென்னை - கிண்டி, C-45, 1வது தளம், திரு.வி.க இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-600032

[illegible]

NHL/CHE/0316/271417, [illegible] சென்னை

19-09-2026

இடம்:- சென்னை, தேதி:- 30.09.2026 அதிகாரப்பூர்வ அதிகாரி, [illegible]

ORIX

ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட்
[illegible]
பதிவு அலுவலகம்: மனை எண்.94, மரோல் கோ-ஆபரேட்டிவ் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அந்தேரி- குர்லா சாலை, அந்தேரி (கி), மும்பை–400 059.
தொலைபேசி: + 91 22 2859 5093/6707 0100| ஃபேக்ஸ்: + 91 22 2852 8549
மின்னஞ்சல்: info@orixindia.com www.orixindia.com CIN:U74900MH2006PLC163937

பிற்சேர்க்கை IV-A [பார்க்க விதி- 8(6) இன் நிபந்தனைகள்]
அசையா சொத்துகளின் விற்பனைக்கான அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் (சட்டம்), 2002 விதி 8(6) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் கீழ் அசையா சொத்துகளின் ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு.

இவ்வாறாக கொடுக்கப்படும் அறிவிப்பில் பொதுமக்களுக்கு பொதுவாகவும் குறிப்பாக கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்(கள்) கடனீட்டுக் கடனீந்தோரான ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட்டுக்கு அடமானமாக/ வசூலிப்பதற்காக வைக்கப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்துகளை அதிகாரப்பூர்வ அதிகாரி நேரடி சுவாதீனம் செய்துள்ளார். அது “உள்ளது உள்ளபடியே”, “உள்ளது உள்ளவாறு”, “உள்ளது எதுவோ அது” அடிப்படையில் 22.10.2026 தேதியன்று கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட்டுக்கு சேர வேண்டிய தொகையை மீட்பதற்கான பொது ஏலம் மூலமாக விற்பனை செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது. நிர்ணயவிலை மற்றும் முன்வைப்புத் தொகை (EMD)கீழே குறிப்பிட்டு உள்ளவாறு இருக்கும்.

கடன்தாரர்கள் மற்றும் உப – கடன்தாரர்கள் பெயர் நிலுவைத் தொகை கடன் கணக்கு எண் கோரிக்கை அறிவிப்பு நாள்	சொத்தின் விவரம்/ கடனீட்டு சொத்து	நிர்ணயவிலை (இந்திய ரூ.) முன்வைப்புத் தொகை (EMD) முன்வைப்புத் தொகை மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி மற்றும் நேரம் ஏல உயர்வுத் தொகை
1.வாசுதேவன் ஸ்ரீதர் 2. ஷிகா ஸ்ரீதர் 23.09.2026 தேதியின்படி இந்திய ரூபாய்.1,03,68,618.05/– (ரூபாய் ஒரு கோடியே மூன்று லட்சத்து அறுபத்தெட்டாயிரத்து அறுநூற்று பதினெட்டு மற்றும் பைசா ஐந்து மட்டும்) LN0000000013801 16.10.2025	O.S.No.274/2B2/65, T.S.No.33, பிளாக் எண்.46, வேளச்சேரி கிராமத்தில் மனை எண்.3, சீதாபதி நகர், 4 ஆவது குறுக்குத் தெரு, அப்பாசாமி நகர் லேஅவுட், வேளச்சேரி, சென்னை–600042 இல் 1066 ச.அடி பரப்பளவு உள்ள இரண்டாவது தளத்தில் உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள அடுக்குமாடி குடியிருப்பு உள்ள சொத்து. இதனுடன் ¼ பங்கான பிரிக்கப்படாத பங்கு அதாவது மொத்தமுள்ள 2800 ச.அடியில் 700 ச.அடி உள்ளது. எல்லைகள்: வடக்கு: S.No.280 இல் உள்ள விஜிபி லேஅவுட், கிழக்கு: S.No.280, தெற்கு: 20 அடி சாலை, மேற்கு: மனை எண்.2	இந்திய ரூ.72,00,000/–(ரூபாய் எழுபத்திரண்டு லட்சம் மட்டும்) இந்திய ரூ.7,20,000/– (ரூபாய் ஏழு லட்சத்து இருபதாயிரம் மட்டும்) 21.10.2026 ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)

ஆர்வமுள்ள ஏலதாரர்/கொள்முதலாளர் கடனீட்டு சொத்து தொடர்பாக ஏதேனும் வினாக்களுக்கு அதிகாரப்பூர்வ அதிகாரி திரு.தியாகராஜன் R (தொடர்பு விவரங்கள்: +91-7418767414) அவர்களை திங்கள் கிழமை முதல் சனிக்கிழமை வரை வேலை நேரங்களில் தொடர்பு கொள்ளலாம்.
விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைத் தெரிந்து கொள்ள ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட்டின் இணையதளம் அதாவது https://www.orixindia.com/sales–notice –இல் கொடுக்கப்பட்ட இணைப்பை பார்க்கவும்.

தேதி: 28.09.2026
இடம்: சென்னை

ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி,
ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட்